4. தொலைபேசி எண்.

5. விலாசம்

6. யாத்திரை

**குறிப்பு :**

1. வெளியூர் அன்பர்கள் D/Dயாகவோ அல்லது உள்ளூர் காசோலை யாகவோ அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

2. ரயில் டிக்கெட் 120 நாள் முன்னதாக ரிசர்வ் செய்ய வேண்டியிருப்பதால் அட்வான்ஸ் 135 நாள் முன்னதாக பதிவு செய்து கொண்டால் ஒரே கோச்சில் டிக்கட் பதிவு செய்ய வசதியாக இருக்கும்.

3. சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது எங்களிடம் ரிசர்வ் செய்துள்ள வரிசைப்படி சீட்டுகள் ஒதுக்கப்படும்.

## கேன்ஸலேஷன்

பலவித அசந்தர்ப்பங்களால் யாத்திரையில் கலந்துக் கொள்ள முடியாத நிலையில் யாத்திரையை கேன்ஸல் செய்ய நேர்ந்தால் - ரயில் ரிசர்வேஷன் / கேன்ஸலேஷன் கட்டணங்களும் மற்றும் ஏஜண்ட் ரிசர்வேஷன் / கேன்ஸலேஷன் கட்டணங்களும் நீங்கள் ஏற்க வேண்டும்.

**யாத்ரீகர்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் கேன்சல் செய்ய நேர்ந்தால், டிக்கெட் கேன்சலேஷன் கட்டணம்,+ GST 5% + சர்வீஸ் சார்ஜ் ரூ. 200/- கழித்துக் கொண்டு மீதி தொகையை வழங்கப்படும்.**

தொலைபேசி மூலம் கேன்சல் செய்தால், எடுத்துக் கொள்ள முடியாது. தபால் கார்டு, இன்லாண்டு லெட்டர், கூரியர் தபால் (எழுத்து மூலம்) தாங்கள் பணம் செலுத்தி உள்ள ரசீது நெம்பரையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

## கடைசியாக ஒரு வேண்டுகோள்


நாங்கள் தங்களுக்குச் செய்யும் சேவைகளை மட்டும் கணித்து குறைகள் இருந்தால் புறக்கணித்து எங்களை மேலும் ஊக்குவிக்க வேண்டுமாய் கோருகிறோம்.

ஸ்ரிய : காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்தினாம்
ஸ்ரீ வேங்கட நிவாஸாய ஸ்ரீனிவாஸாயமங்களம்.

சுபம்ஸ்ரீ

**இப்படிக்கு**
**நிர்வாகி**
**ஜெயலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்**

உ
ஸ்ரீ ரஸ்து
ஸ்ரீவெங்கடேசாய நம:



# ஜெயலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்

**4/13, சன்னதிதெரு, லலிதா கார்டன், முதல் மாடி,**
**திருவான்மியூர், சென்னை – 41**

**ஆபீஸ் போன் : 044 24451270,**
**செல் : 94449 80270, 81229 96045**

E.mail: jayalakshmi.yatra@gmail.com
www.jayalakshmiyatraservice.com

ஸ்ரீதிருப்பதி வெங்கடேஸ்வர ஸ்வாமி திருவருளால் 26 வருடங்கள் அனுபவத்துடன் வட இந்திய யாத்திரை வழிகாட்டியாக பணிபுரிந்து நான் துவங்க உள்ள யாத்திரை சேவைக்கு தங்களின் மேலான ஆதரவைத் தந்தருள வேண்டுமாய் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

புனித யாத்திரை காசி, கேதார்நாத், பத்ரிநாத், துவாரகா, மும்பாய், அஷ்ட கணபதி, காமாக்யா, நேபாள், முக்திநாத், பூரி ஜகன்நாத், ஸ்ரீ வைஷ்ணோ தேவி, அமர்நாத், மற்றும் வட இந்திய யாத்திரைகள் நடத்தும் ஸ்தாபனம்

நிர்வாகி : K.ரகு

# அனைத்து யாத்திரைகளிலும் நாங்கள் செய்து கொடுக்கும் வசதிகள்

**கைதேர்ந்த தென் இந்திய பிராமணர்களால் சமையல் செய்யப்படும்.**

1. சமையல் வைதீகமான முறையில் இருக்கும். காலை காபி, டிபன், 1 Liter Water battle பகல் போஜனம், மாலை காபி, டீ இரவில் போஜனம் அல்லது டிபன், போஜனம் வகையில் அளவு கிடையாது. ரயிலில் போகும் போதும் வரும் போதும் காபி, **தண்ணீர்** மட்டும் நீங்களே வாங்கி கொள்ள வேண்டும்.
2. அன்னம் நன்றாக வெந்து அவிந்த அளவில் இருக்கும். சீதோஷ்ண நிலையில் மாறுதல் ஊருக்கு ஊர் ஜலத்தில் மாற்றம் அலைச்சல், அகால போஜனம் இவை ஏற்படும் போது அவிந்த சாதமே ஆரோக்கியத்திற்கு நல்லது.
3. காலை நேரத்தில் ஆலய தரிசனங்களும், வைதீகக் காரியங்களும், மாலை நேரத்தில் ஊர் சுற்றிப் பார்ப்பதுமாக நடைபெறும்.
4. யாத்திரையின் போது உங்கள் உபயோகத்திற்கு கொண்டு வர வேண்டிய சில பொருட்கள்.

   தட்டு, டம்ளர், ப்ளாஸ்க், உடைகள், பெட்டி / பை, காற்று தலையணை, படுக்கை, போர்வை, ஸ்வெட்டர், மப்ளர், டார்ச்லைட், குடை, பிளாஸ்டிக் கயிறு, சீப்பு, சோப்பு, பவுடர், முகம் பார்க்கும் கண்ணாடி, விபூதி, குங்குமம், மஞ்சள், சந்தனம், பஞ்ச பாத்திரம், உத்திரணி, மடி வஸ்திரம்
5. யாத்திரை ஆரம்பத்தில் தங்கள் உபயோகத்திற்காக ஒரு பை வழங்குகிறோம். அதில் அன்றாட உபயோகத் துணிமணிகள் சில்லறை சாமான்கள் எடுத்து வர உபயோகமாகும்.
6. ஸ்நானங்களுக்கும், தரிசனங்களுக்கும் போகும் போது தங்கும் இடத்தில் எல்லாச் சாமான்களையும் வைத்துவிட்டு எங்களால் கொடுக்கப்படும் பையில் தேவையான பொருட்கள் வரை எடுத்து செல்லலாம்.
7. ஸ்தீரிகளுக்கும், வயோதிகர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும்.
8. அதிகமான நகைகள், ஆடம்பரப் பொருட்கள் கொண்டுவர வேண்டாமென்று கோருகிறோம்.
9. எங்காவது காலை நேரங்களில் தங்கி, மாலை அல்லது இரவு புறப்படும் போது ஹால் (dormitory) போன்ற இடங்கள் ஏற்பாடு செய்யப்படும். மற்றபடி இரவு நேரங்களில் தங்கும் போது கூடிய வரையில் ரூம்களே ஏற்பாடு செய்கிறோம். யாத்திரையில் Privacy கூடாது என்பதற்காக ஒவ்வொரு ரூமிலும் ஒன்று, இரண்டு பேரை அதிகமாகச் சேர்க்கின்றோம். தங்களுக்கு தனி ரூம் தேவை பட்டால் முன் கூட்டியே தெரியப்படுத்தினால் ஏற்பாடு செய்து தரப்படும். (Extra Pay)
10. யாத்திராதானம் - யாத்திரை புறப்படும் அன்று காலை யாத்ரீகர்கள் ஸ்நானம் செய்து சுத்த வஸ்திரம் தரித்து யாத்திரை நல்ல படியாக நிறைவேற வேண்டும் என்பதற்காகத் தங்கள் வீட்டு புரோகிதரைக் கொண்டு விநாயகர் பூஜை செய்து யாத்திராதானம் செய்ய வேண்டும். அதாவது தங்களால் இயன்ற அளவு அரிசி, நெல், உப்பு, வஸ்திரம் இவைகளை எல்லாமே அல்லது முடிந்தவரையிலோ தானம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்ய முடியாதவர்கள், தங்கள் பெயர், நக்ஷத்திரம், கோத்திரம் இவைகளை எழுதி எங்களுக்குத் தெரிவித்தால், தங்களுக்காக இங்கு செய்து வைக்கப்படும். அதற்காகத் தனியாக ரூபாய் 10/- கொடுக்க வேண்டும்.
11. சில இடங்களில் பஸ் போக முடியாவிட்டால் ரிக்ஷாவில் போக நேர்ந்தால் ரிக்ஷா சார்ஜ் யாத்திரிகர்கள் கொடுக்க வேணும்.
12. எல்லா இடங்களிலும் நுழைவுக் கட்டணங்கள், படகு சார்ஜ்கள் யாத்திரிகர்கள் கொடுக்க வேணும்.
13. (i) ஹிந்துக்கள் அல்லாத மற்றவர்களும் தொத்து வியாதி உள்ளவர்களும் தனியாக வர விரும்பும் இளம் பெண்களும், இளைஞர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

    (ii) யாத்ரீகர்களை சேர்த்துக் கொள்ளும் உரிமை கம்பெனியைச் சேர்ந்தது.

    (iii) எந்த ஒரு யாத்ரீகராவது மற்றவர்கள் மத்தியில் கெட்டப் பழக்கங்களைக் கையாளுவாரானால் மற்ற யாத்ரீகர்களுடைய முன்னிநிலையில் அவர்கள் அங்கேயே இறக்கிவிடப்படுவார்.

    (iv) எல்லாவிதமான சட்ட அலுவல்களும் சென்னை நீதிமன்றங்களுக்கு உட்பட்டதாகும்.
14. யாத்திரையில் ஏதோ சில சந்தர்பத்தால் திரும்ப நேரிட்டால், எந்தவிதமான தொகையும் திருப்பித் தர இயலாது.
15. ரயில் (ஸ்லீப்பர்), பஸ் சார்ஜ், தங்கும் வசதி, ஆகார வசதி, 1 Liter Water batol Per day ஊர் சுற்றிர்க்கும் செலவு ஆகிய அனைத்தும், எங்கள் கட்டணத்தில் அடங்கும். ஒரு வேளை மேல் வகுப்பில் வர விரும்பினால் அந்த வித்யாசத் தொகையை யாத்ரீகர்கள் கொடுக்க வேணும்.

16. ரெயில்வே பாஸ் உள்ளவர்கள் அவர்களே ரிசர்வ் செய்து கொள்ளலாம் அல்லது எங்களிடம் கொடுத்தால் நாங்கள் ரிசர்வ் செய்து தருகிறோம். அவர்கள் ரயில் கட்டணம் கழித்து மீதி கொடுக்கலாம்.

17. சீனியர் சிடிஸன் மூத்த குடிமக்களுக்கு (வயது - ஆண் 60 / பெண் 58) ரயில் கட்டணத்தில் சலுகை அரசாங்கத்தால் அளிக்கப்படுகிறது. அதற்க்கென வயது அத்தாட்சி கொண்டுவர வேண்டும். நீங்கள் கொடுக்கும் வயது அத்தாட்சியை வைத்து நாங்கள் டிக்கெட் வாங்குகிறோம். எனவே வயதில் வித்தியாசம் வந்தால் கூடுதல் கட்டணம் நீங்கள் தான் கட்ட வேண்டும். நாங்கள் பொறுப்பு இல்லை.

18. சீனியர் சிடிஸன் மூத்த குடிமக்கள் சலுகை ஒவ்வொரு யாத்திரைக்கு ஒவ்வொரு விதமாக இருக்கும். அந்த சலுகையை கழித்தும் கொடுக்கலாம். அல்லது முழுமையான கட்டணம் செலுத்தி பிறகு சீனியர் சிடிஸன் சலுகையை காசோலை மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

19. எங்களுக்கு ஏஜெண்டுகள், கிளை அலுவலகங்கள் கிடையாது.

20. யாத்ரீகர்கள் அனைவரும் புகைப்பட அடையாள அட்டை (ID Card Orignal) அவசியம் கொண்டு வர வேண்டும்.

**யாத்ரீகர்களாகிய நீங்கள் யாத்திரை செய்யும்போது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள்**

1. ஜன்னல் பக்கத்தில் சாமான் வைப்பது கூடாது. தலை வைத்து படுத்து தூங்கவும் கூடாது.

2. நதிகளில் ஸ்நானம் செய்யும் போது மானேஜர் சொல்படி அனுசரித்து ஸ்நானம் செய்ய வேண்டும். எனக்கு நீச்சல் தெரியும் என்றோ வேறுவிதமாகவோ பதில் உரைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

3. நிர்வாகத்தில் ஏதாவது குறை தெரிந்தால் அவைகளை அப்போதைக்கப் போது கேட்டு விசாரித்து குறை நிவர்த்தி செய்ய வேண்டும். சிப்பந்திகள் விஷயத்தில் குறைகள் தெரிந்தால், மானேஜரிடம் தெரிவித்து உடனே நிவர்த்திக்க வேணும். குறைகளை வளரவிட்டு சேர்த்துக் கொண்டு மனத்திற்கு ஆயாஸத்தை வளரவிட வேண்டாம் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

4. தங்களுக்கு ஏற்படும் சிறு சந்தேகங்களை அவ்வப்போது நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

5. சகலவிதமான முன் ஏற்பாடுகளும் செய்திருந்த போதிலும் சில சமயங்களில் தவிர்க்க முடியாத நிலையில் சில சங்கடங்கள் ஏற்படலாம். அவைகளைச் சகிப்புத் தன்மையுடன் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

6. சில நேரங்களில் ஆகார வசதிகளில் கலந்து கொள்ளாவிட்டால் அதற்காக யாதொரு தொகையும் திருப்பித் தர இயலாது.

7. பத்ரி பிரம்ஹகபாலம், பிரயாகை, காசி, கயா முதலிய இடங்களில் வைதீகக் கசாரியங்களுக்குத் தகுந்த புரோகிதர்களை ஏற்பாடு செய்து தரப்படும்.

8. க்ஷேத்ரங்களுக்கு பஸ்களில் செல்லும் போது பாதை உள்ள வசதியை அனுசரித்து க்ஷேத்ரங்கள் முன்பின்னாகச் செல்லக் கூடும். எப்படி சென்றாலும் யாத்திரையில் குறிப்பிட்டுள்ள அனைத்து இடங்களையும் தரிசிக்கின்றோம்.

9. நாம் யாத்திரை போகும் நகரங்களில் தங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்கள் இருப்பார்களானால், நம் ப்ரோகிராம் பார்த்து அதன்படி வந்து உங்களை சந்திக்கலாம்.

10. நாங்கள் யாத்திரை அறிவித்த பிறகு ரயில் கட்டணம் ஏற்றம் ஏற்பட்டால் அதை யாத்ரீகாகளே கொடுக்க வேண்டும்.

11. யாத்ரீகர்கள் ரயிலில் ஏறுவதற்கு முன் ரயில்வே சார்ட்டில் பெயர், வயது, ஆண் / பெண் விவரம் பெர்த் இவை சரியாக இருக்கிறதா என்று பார்த்து ஏற வேண்டும்.

12. கூடிய வரையில் தங்கள் தேவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசித்து அதன்படி செய்தால் அனுகூலமாக இருக்கும்.

## டிக்கட்கள் பதிவு செய்யும் முறை

எங்கள் விளம்பரம் பார்த்து ப்ரோகிராம் கேட்டு வாங்கி படித்து பார்த்து திருப்தி ஏற்பட்டவுடன் நபர் ஒன்றுக்கு ரூபா 2,000/- விதம் அட்வான்ஸ் செய்து தேவையான இடங்களை பதிவு செய்து கொள்ளலாம். Jayalakshmi Yathra Service, Chennai என்ற பெயருக்கு ரொக்கம் / Cheque / DD / Money Order / Bank Account Transfer மூலம் ரூபாய் செலுத்தலாம். அதே போன்று மீதி தொகையை யாத்திரை புறப்படும் ஒரு மாதம் முன்னதாக செலுத்த வேண்டும். யாத்திரை மேற்கொள்பவர்கள் பதிவு செய்வதற்கு தேவையான விவரங்கள்.

1. பெயர்
2. வயது
3. ஆண் / பெண்